# தகுதி

திரு. தி.ச.வரதராசன் "வரதர்"
அவர்களின்
ஓராண்டு நினைவாக

வெளியீடு:
யாழ் இலக்கியவட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதி

திி. ச.வரதராசன் "வரதர்"
அவர்களின்
ஓராண்டு நினைவாக

வெளியீடு:
யாழ் இலக்கியவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

நூல் : தகுதி

வெளியீடு : யாழ் இலக்கிய வட்டம்
521/9 பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

முதற் பதிப்பு : தை 2008

மொழி : தமிழ்

பக்கங்கள் : 28

அச்சுப்பதிப்பு : ஆனந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

விலை : ரூபா 100.00

## உள்ளே...

| | பக்கம் |
|---|---|
| தகுதி | 3 |
| தமிழ்மொழி தேய்கிறதா? | 8 |
| உடம்போடு உயிரிடை நட்பு | 13 |
| பொய்மையும் வாய்மையிடத்து | 17 |
| தென்றலும் புயலும் | 21 |

## மணம் மிக்க ஒரு மலர் உதிர்ந்தது

''வரதர்'' என்று மதிப்போடும் மரியாதையோடும் அழைக்கப்பட்ட திரு.தி.ச.வரதராசன் இறந்துவிட்டார். அவருடைய இழப்பு தமிழ் இலக்கியத்திற்கு பேரிழப்பு என்று கூறுவதன் மூலம் இதனை சம்பிரதாயமாக்கிவிடக் கூடியது அவருடைய எழுத்துக்களைப் பாதுகாப்பதன் மூலம்தான் அவருக்கு உண்மை யான கௌரவத்தை அளித்தல் முடியும் என்னும் நோக்கில் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

பழமைக்கும் புதுமைக்கும் பாதை அமைத்து அதில் வளம்மிக்க தமிழ்த் தாயை வலம் செய்து பார்த்தவர். களம் தந்து பல பேரைக் கைதூக்கிவிட்டவர். இலக்கியச் சாதனையாளர் ஈழத்து இலக்கிய உலகத்தினால் நன்றியோடும் மகிழ்ச்சியோடும் பெருமையோடும் என்றும் எண்ணக்கூடிய ஒருவர். அவரின் ஓராண்டு நினைவாக அவரால் எழுதப்பெற்ற இவ் ஐந்து சிறுகதைகளையும் அவரின் திருவடிகளில் சூட்டி மகிழ்கின்றேன்.

கி. கிருபானந்தா
செயலாளர்
யாழ் இலக்கிய வட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதி

சரியான சாப்பாடில்லாமல், கிடைத்த சாப்பாடும் உடம்பில் ஒட்டாமல் வாடிப் போயிருந்த சிவகுமாரன் பீ.ஏ. திடீரென்று பூரித்துப் போனான். பூரித்தது அவனது உடம்பல்ல, என்னதான் சத்துள்ள உணவுகளைத் திணித்தாலும் உடம்பு பூரிப்பதற்குச் சில மாதங்களாவது செல்லும். ஆனால் உள்ளம் அப்படியல் லவே. ஒரு நொடியிலேயே அது பொங்கிப் பூரித்து விடுகிறது! கடந்த இரண்டு வருடங்களாகக் கொஞ்சம் கொஞ்சமாய் மெலிந்து நலிந்து செத்துக் கொண்டி ருந்த சிவகுமாரனுடைய உள்ளம் இன்று திடீரென்று உயிரின் முழுப் பொலிவை யும் பெற்றுவிட்டது.

ஆறு வருடங்களுக்கு முன்னால் பல்கலைக் கழகத்தில் படிப்பதற்கு இடம் கிடைத்துச் சென்ற போது, தன்னுடைய வாழ்க்கையே உயர்ந்து விட்டதாக அவன் நினைத்தான். நாலே நாலு வரு டங்கள் என்ன கஷ்டப்பட்டும் படித்து முடித்துவிட்டால், இந்த சமூகத்தில் தானும் ஒரு சிறந்த மனிதனாக வாழ லாம் என்று அவன் கனவு கண்டான். கஷ்டமென்றால் சாதாரண கஷ்டமா? அந்த நான்கு வருடங்களும் அவனைச் சாப்பிட்டே விட்டன. தகப்பனாருடைய சிறு சம்பளத்தில் குடும்பம் நடக்குமென் றும், தங்களுக்கிருந்த ஒரே ஒரு வீடு வளவை ஈடுவைத்து கடன் வாங்கிப் படிப்பதென்றும் ஏற்பாடு. படிப்பு முடிந்த தும் உடனே வேலைகிடைக்கும்; வெகு சீக்கிரத்தில் கடனைத் தீர்த்து விடலாம்; அக்காவின் சீதனமாகக் காத்துக் கிடக்கும் அந்த வீடு வளவையும், வேண்டுமா னால் இன்னும் பணத்தையும் கொடுத்து அக்காவை நல்ல இடத்திலே அந்த இராமநாதனுக்கே - திருமணம் செய்து வைக்கலாம் - இப்படியெல்லாம் ஒரு ஒழுங்கான திட்டத்தோடுதான் சிவகுமா ரன் பல்கலைக் கழகப் பிரவேசம் செய் தான்.

ஆனால், இரண்டாவது வருடமே அவனுடைய திட்டத்தின் உச்சந்தலை யில் பெரிய இடி விழுந்தது. சொற்ப சம்பாத்தியம் செய்து அதைக் கொண்டே குடும்பச் செலவை நடத்தி வந்த அவனு டைய தகப்பனார், பத்து நாள் படுக்கை யில் கிடந்து கண்ணைமூடி விட்டார்.

சிவகுமாரனுக்கு எக்கச்சக்கமான நிலை. தகப்பனார் இறந்த துக்கத்தை யும் மிஞ்சி, அதற்கு மேலாக அவனு டைய பொருளாதார நெருக்கடி பெரும் பூதமாக அவனைக் கௌவி நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பை நிறுத்தி விடலாமா என்று கூடச் சிவகுமாரன் யோசித்தான். தாயார் கூட, அப்படிச்செய்வதுதான் நல்லதோ என்று எண்ணினாள். அவளுக்கு மகளைப்பற்றிய கவலை. ஆனால் அக்காதான் ஒரே பிடிவாதமாகத் தம்பி எப்படியும் படிக்க வேண்டுமென்று வற் புறுத்தினாள். படிப்பை நிறுத்தி விட்டா லுங்கூட, பிரச்சனை தீரும் வழியைக் காணாததால், சிவகுமாரனும் படிப்பைத் தொடர்ந்தான்.

அதன் பலன் அவனுடைய படிப்பு முடியுமுன்னரே ஈடுவைத்த வீட்டை விற்க வேண்டிய நிலைவந்தது. வீட்டை விற்றும் ஒன்றும் மிஞ்சவில்லை. கட னுக்கும் வட்டிக்கும், சிவகுமாரனுடைய படிப்புக்கும் அது ஒரு மாதிரி ஈடுகொடுத் தது. அந்த மட்டிலாவது திருப்திப்பட வேண்டியதுதான்.

சிவகுமாரன் பி.ஏ பட்டத்தோடு வீட்டுக்கு வந்தான். இரண்டு வருடங்க ளுக்கு முன் வீட்டுக்கு வந்தவன், இன்ன மும் வீட்டிலேயே இருக்கிறான்.

அவன் மாத்திரமா, அவனுடனும், அவனுக்கு முந்தியும், பிந்தியும் பல் கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த இன்னும் எத்தனையோபேர் சும்மா தான் இருக்கிறார்கள்.

ஆனால், அவனைப் போலவா! அவனுடைய நிலையிலா!

எத்தனையோ நண்பர்கள் பொழுது போக்குக்காகவும், பெற்றோருடைய வற் புறுத்தலுக்காகவும் படித்தார்கள். சிவகு மாரனின் நண்பன் செல்வராசன் கூட அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான். அவனுடைய தகப்பனாருக்குப் பெரிய உத்தியோகம். படித்து பி.ஏ. பாஸ் பண்ணிவிட்டு, ஒரு வேலையும் இல்லா விட்டாலும், சந்தோஷமாகத் தனது ஸ்கூட்டரில் அவன் சுற்றிக்கொண்டு திரிகிறான். ஆனாலும் அவன் உண்மை யில் நல்ல நண்பன்.

நாள்மலர் பத்திரிகையில் உதவி ஆசிரியர் வேலை ஒன்று இருக்கிறது. நல்ல சம்பளம், மாதம் ரூபா 350ல் தொடங்கும். என்னை விண்ணப்பிக் கும் படி அப்பா சொன்னார். ஆனால் சிவா, எனக்கும் அந்த உதவி ஆசிரியர் வேலைக்கும் வெகுதூரம்; உனக்குத் தான் தோதான வேலை. முயற்சித்துப் பார் என்று அவன்தானே சொன்னான்! தனக்குத் தோதாக இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு வேலை என்று வருவதை யார்தான் விடுவார்கள்! அதுவும் அவனு டைய அப்பா நினைத்தால் அந்த வேலை அநேகமாக அவனுக்குக் கிடைத்து விடும். அப்படியிருந்தும் அவன் என் கஷ்டத்தை நினைத்தே விட்டுக்கொடுத் திருக்கிறான். அவன் ஒருவனுக்குத் தான் என்னைச் சரியாக விளங்கும் - என்று நினைத்தபோது ஓடிப்போய் செல்வராசனைக் கட்டிப்பிடித்துக் குழற வேண்டும் போல ஒரு உணர்ச்சி தோன்றியது சிவகுமாரனுக்கு. தன் கண்களில் பனிந்த துளிகளை விரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுனியால் துடைத்துவிட்டு, மெல்லச் சிரித்துக் கொண்டான். 'செல்வராசன் தான் எவ்வளவு பெரிய தியாகி!'

நாள்மலர் ஆசிரியர் எழுதிய கடிதத்தை - எத்தனையோ தடவைகளுக்குப் பிறகு - மீண்டும் ஒரு முறை எடுத்துப் படித்தான்.

'நான் நேரில் சொல்லியபடி கிடைத்த விண்ணப்பங்களுள் உங்களுடையதுதான் மிகவும் சிறப்பாக இருக்கிறது. நான் நல்ல சிபார்சு செய்து முதலாளியிடம் அனுப்பியிருக்கிறேன். இந்த வாரத்திலேயே கடிதம் வரும். வருகிற முதலாம் தேதியிலிருந்து இங்கே வேலை செய்யவேண்டியிருக்கும். தயாராக இருங்கள்...'

இயல்பாகவே இலக்கியத்தில் இருந்த ஆர்வத்தினால் சிறுகதை எழுதத் தொடங்கி, அந்தத் துறையில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று, அதன் மூலம் மாதந்தோறும் முப்பது, நாற்பது ரூபா கிடைக்கிறதென்ற காரணத்தினால் தொடர்ந்து எழுதிக் கொண்டு வந்தது எவ்வளவு நல்லதாயிற்று. 'நாள்மலர்' வார இதழ்களில் அடிக்கடி சிவகுமாரனின் சிறுகதைகள் வெளிவந்து கொண்டிருந்தன. அதனால் தான் செல்வராசன் நாள்மலரில் உதவி ஆசிரியர் வேலை இருக்கிறது என்று சொன்னதும் கொஞ்சம் நம்பிக்கையோடு விண்ணப்பத்தை அனுப்பினான். நேர்முகமாக இவனை அழைத்து நாள்மலர் ஆசிரியர் பரீட்சித்தபோது அந்த நம்பிக்கை மிகவும் வளர்ந்தது. ஆசிரியருக்கு இவன் மீது நல்ல மதிப்பு இருந்தது தெரிந்தது. 'பெரும்பாலும் உமக்குத்தான் இந்த வேலை கிடைக்குமென்று நம்புகிறேன். பிறகு கடிதம் எழுதுகிறேன்' என்று சொல்லி அவனுடைய கதைகளுக்காகவும் - அவனைப் பாராட்டி அனுப்பிய ஆசிரியர், சொன்னது போலவே கடிதம் எழுதிவிட்டார்.

சிவகுமாரன் பி.ஏ. திடீரென்று பொங்கிப் பூரித்துப் போனான்.

முதலாம் திகதியே உத்தியோகம். மாதம் 350/- ரூபா சம்பளம்!

லொட லொட சைக்கிளில் ஓடிக் கொண்டிருந்தவனுக்கு திடீரென்று பென்ஸ் கார் சவாரி கிடைத்தது போல இருந்தது சிவகுமாரனின் நிலைமை.

உலகில் வரட்சியையும், வெறுப்பையும், கசப்பையுமே கண்டுகொண்டிருந்தவனுக்கு முன்னால், உலகம் செல்வச் செழிப்போடு, இன்முகத்தோடு சிரித்தது.

இனி என்ன!

அவனுக்கு வாழ்வு பிறந்து விட்டது! அவனுடைய அக்காவுக்கு வாழ வழி பிறந்து விட்டது! அம்மாவின் முகத்திலே இலட்சுமி குடிவந்து விட்டாள்!

எல்லாம், எல்லாம், எல்லாமே வந்து விட்டன!

'அக்காவுக்கும் இராமனாதனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தம் செய்யலாமென்று முன்பு ஒரு எண்ணம் இருந்தது. அவர்களுக்குள் சாடையாகக் காதல் இருந்ததென்றுகூட அவன் காதில் விழுந்ததுண்டு. காத லென்ன, காதல்! பல்கலைக்கழகத்துக் காதலா? தனியாகப் பதினைந்து நிமிட நேரம் பேசக்கூட இவர்களுக்கு சந்தர்ப் பம் கிடைத்திருக்காது. சும்மா ஒரு விருப் பமாக்கும். என்றாலும் அக்காவுக்கு இராமநாதனைப் பிடிக்குமென்றால், எப்படியும் அவரையே ஒழுங்கு செய்து விட வேண்டும்!

'தம்பி, இந்தா' என்று அக்கா கொண்டுவந்து அவன் கையில் பணத் தைக் கொடுக்கிறாள்.

'இது என்னக்கா? என்ன பணம்?'

'அடைவு எடுக்கலாமென்று மாதம் மாதம் சேர்த்து வைத்த பணம். எண்பது ரூபா இருக்கிறது. அடைவு பிறகு எடுக்க லாம். இப்போது உனக்கு வேலைக்குப் போக உடுப்புத்தான் வேணும். ஏதாவது வாங்கிவந்துவை. அடைவு பிறகு எடுக்கலாம்'

'இப்போது அவசரமில்லை அக்கா' என்று முதலில் சொன்னாலும், சிவகு மாரன் பணத்தை வாங்கிக் கொண் டான். முதல் மாதச் சம்பளத்திலேயே அடைவை எடுத்துவிட முடியுமல்லவா இப்போது அவனுக்கு உடுப்புக்களும் மிக அவசியந்தான்.

'என்ன இருந்தாலும் அக்காவுக்குத் தான் என்னிடம் எவ்வளவு அன்பு! முன்பு அப்பா இறந்தபோது தொடர்ந்து படிக்கும்படி வற்புறுத்தியவளும் அவள் தானே? - என்ன கஷ்டப்பட்டாலும் அக்காவின் விருப்பப்படி அந்த இராம நாதனுக்கே..'

இரண்டாவது நாள் அவனுக்குக் கடிதம் வந்தது.

கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள் அவன் பார்வை மங்குகிறது; மனம் செத்தே விட்டது!

'....உங்கள் விண்ணப்பத்துக்கு நன்றி. குறித்த உதவி ஆசிரியர் பதவிக்கு வேறு ஒருவரை எடுத்து விட்டோம்...

கூடவே இன்னும் இரு கடிதங்கள், கை பிரிக்கிறது. கண் பார்க்கிறது.

நாள் மலர் ஆசிரியர் எழுதியிருக்கி றார்.

'...நான் மிகவும் வருந்துகிறேன். முதலாளிக்கு மிக வேண்டிய ஒருவ ருக்கு அந்த வேலையைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது...'

மூன்றாவது கடிதம் செல்வராசன் எழுதியிருக்கிறான்.

'....நான் விண்ணப்பிக்காமலி ருக்கவும், அப்பா அந்த உதவி ஆசிரியர் வேலையை எனக்கு வாங்கிக் கொடுத்தி ருக்கிறார். நான் என்ன செய்வேன்? மன்னித்துக்கொள்...'

கடிதங்களை மேசை லாச்சியுள் போட்டு விட்டு, மேசை மீது தலையைப் போட்டுக் கிடக்கிறான் சிவகுமாரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிவாடு படித்தால் மட்டும் போதுமா? பட்டம் வாங்கி விட்டாலும் போதுமா? அந்த வேலையைத் திறம்படச் செய்ய இந்தத் தேசத்தில் நீதான் ஏற்றவன் என்ற நிலை இருந்தாலும் போதுமா? ஐயோ பாவம்; மிகவும் கஷ்டப்படுகிறாய். உனக்கு ஒரு வேலை மிகமிக அவசியம் என்ற நிலையில் நீ இருந்தாலுங்கூடப் போதுமா?

'சிவா, அதற்கு வேறு தகுதிகளும் வேண்டும். அது செல்வராசனுக்கு இருக்கிறது. உனக்கு இல்லையே! உனக்கு இல்லையே! உனக்கு இல்லையே!

'உனக்கு ஒன்றும் இல்லை!'

அவனுடைய உள்ளம் செத்து விட்டது.

உடம்பு-

அது மெதுவாகத் தலையை நிமிர்த்தி எழும்பி யாருக்கும் சொல்லாமல் வீட்டைவிட்டு வெளியேறித் தெருவில் நடக்கிறது.

எங்கே போகிறதோ!

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி தேய்கிறதா?

அன்று ஞாயிற்றுக் கிழமை! மாலை நேரம்.

மூர்த்தி மாஸ்டர் தனது வீட்டுத் தலைவாசலில் ஒரு ஈசி செயரில் சாய்ந்திருக்கிறார்.

அவருக்கு வலது புறம் இருந்த இரண்டு நாற்காலிகளில் இளங்கோவும் அவன் மனைவி கயல்விழியும் இருக்கிறார்கள்.

மறுபுறம் இருந்த ஒரு நாற்காலியில் கணபதி ஐயர் இருக்கிறார்.

இது வழக்கமாக ஞாயிற்றுக் கிழமை மாலைகளில் காணப்படுகிற ஒரு காட்சி.

மூர்த்தி மாஸ்டர் தமிழாசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். பிரம்மச்சாரி, தனிக்கட்டை, நிறையப் படிக்கிறவர், மனித நேயமுள்ளவர், ஊரவர்களால் மிகவும் மதிக்கப்படுகின்ற ஒரு அமைதியான ஆள்.

இளங்கோ ஒரு வங்கியில் கடமையாற்றுபவன். எழுத்தாளன். அதிகமாகச் சிறுகதைகளையே எழுதுகிறவன். இவன் மனைவி கயல்விழி நல்ல ரசிகை. இளங்கோவோடு சேர்ந்து இவளும் நல்ல சிறுகதைகளை எழுதி இருக்கிறாள். டாக்டர் மு.வரதராசனார் இந்த எழுத்தாளத் தம்பதிகளை வியந்து பாராட்டி ஒருமுறை எழுதியிருக்கிறார்.

கணபதி ஐயர் பிள்ளையார் கோயில் பூசகர். கோயில் உரிமையாளரும் அவர் தான். நல்ல மனம்கொண்ட மனிதர். பரம்பரையாக வந்த கட்டுப்பாடுகளை உதறிவிடாமல் வாழ்பவரானாலும் சீர்திருத்தக் கருத்துக்களையும் பகுத்தறிவுக் கொள்கைகளையும் நெஞ்சிலே கொண்டவர். நிறைய வாசிக்கிறவர், மனித நேயம் மிக்கவர்.

கிழமைக்கு ஒருதரமேனும் கூடிக் கதைக்காவிட்டால் இந்த நாலுபேருக்கும் பத்தியப்படாது.

"மண்வாசனை, மண்வாசனை என்று கொச்சைத் தமிழ் எழுதுகிற எழுத்தாளர்களைப் பற்றிக் குறைப்படுவீர்களே மாஸ்டர் - இப்போது உங்கள் பக்கத்துக்குக் காற்று வீசும் போலத் தெரிகிறது" என்றான் இளங்கோ.

"எதைச் சொல்கிறீர்?' என்று மூர்த்தி மாஸ்டர் கேட்டார்.

"போன கிழமை எழுத்தாளர் ஒன்றியத்தில் ஒரு கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் 'நந்தி' ஒரு புதிய கருத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்...'

''நந்தி முற்போக்குச் சங்க ஆளெல்லவோ?''

''ஓமோம் - அவர் சொன்னதால் தான் அது முக்கியம்''

''என்ன சொன்னார்?''

''சமீபத்தில் அவர் பெங்களூருக்குப் போயிருந்தாராம். அங்கே ஒரு சாதா ரண தமிழனுடன் பேச்சுக் கொடுத்தா ராம். அந்தத் தமிழன் இவரைப் பார்த்து, ''சார், எனக்குக் கன்னடம் விளங்காது, தமிழிலேயே பேசுங்கள்!'' என்றாராம்.

''நந்தி கன்னடம் பேசினாரா?'' என்று கேட்டார் கணபதி ஐயர்.

இல்லை, தமிழில்தான் பேசினார். இவர் பேசிய யாழ்ப்பாணத்துத் தமிழ் ஏதோ வேற்று மொழிபோல அவருக்குத் தோன்றிற்று. அவர் அதைக் கன்னட மொழியென்று கருதியிருக்கிறார்!'' என்றான் இளங்கோ.

''ஓமோம், எனக்குக் கூட அப்படி ஒரு அனுபவம் இருக்கிறது. ஒரு முறை நான் திருச்சியில் ஒரு கடைக்காரரிடம் பேசிக் கொண்டிருந்தபோது 'சாருக்கு மலையாளமோ?' என்று அவர் கேட்டார். என்னுடைய பேச்சுத் தமிழ் அவருக்குத் தமிழ் மொழியாகத் தெரியவில்லை! என்றார் மூர்த்தி மாஸ்டர்.

''அதுசரி அந்தச் சம்பவத்துக்குப் பிறகு நந்திக்கு என்ன உண்மை புலப்பட்டதாம்?'' என்று கயல்விழி கேட்டாள்.

''நாங்கள் எங்களுடைய பேச்சுத் தமிழில் எழுதினால், மிகப் பெரிய அளவிலுள்ள தமிழ் நாட்டுத் தமிழர் களிடையே அது செல்லுபடியாகாது. அவர்கள் தங்கள் கொச்சைத் தமிழில் எழுதுவதையெல்லாம் நாங்கள் புரிந்து கொண்டு சுவைக்கிறோம் என்பது உண்மைதான். அதற்குக் காரணங்கள் உண்டு, பல காலமாக அவர்களுடைய பேச்சு மொழியை பத்திரிகைகள், புத்தகங்களில் படித்தும், வானொலி, சினிமாவில் கேட்டும் நாங்கள் அதைப் பழகிக் கொண்டோம். அந்தப் பேச்சு மொழியில் எழுதும் இலக்கியங்களை நாங்கள் நன்றாகச் சுவைக்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். ஆனால் எங்களடைய பேச்சு மொழியை நன்கு புரிந்துகொள்ளும் வாய்ப்பு அவர்க ளுக்கு இல்லை, அவர்களுக்கு அது அவசியம் தேவையாகவும் இல்லை. 'உங்களுடைய மொழியை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். அதுபோல நீங்களும் எங்களுடைய மொழியைப் புரிந்து கொள்ளத்தான் வேண்டும்' என்று நாங்கள் நியாயம் பேசுவது ஒரு கிறுக்குத்தனம்தான்...''

''தமிழிலே இன்றைய இலக்கியம் படிக்கும் நாங்கள் தமிழ் நாட்டுப் பேச்சுத் தமிழைப் புரிந்துகொள்ளாவிட்டால் எங்களுக்குத்தான் நட்டம். எங்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுத் தமிழைப் புரிந்து கொள்ளாவிட்டால் அவர்களுக்குப் பெரிதாக நட்டம் ஒன்றுமில்லை!'' என்றார் கணபதி ஐயர்.

''ஓமோம். நந்தி சொன்னார், 'மண்வாசனை' என்பது வெறும் சொற்களினால் மட்டும் வருவதில்லை. அந்த மக்களின் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகளைச் சரியாக எழுதினால்தான் உண்மையான மண் வாசனை வரும் என்று சொன்னார்.''

''நந்தி அப்படிச் சொன்னாரா? அச்சா!'' என்று மகிழ்ச்சியோடு சொன்னார் மூர்த்தி மாஸ்டர். தனது கருத்தை இன்னொருவரும் அப்படியே சொன்னால், ஒரு மகிழ்ச்சி தோன்றுவது மனித இயற்கையே.

''இந்த முற்போக்குக்காரர்கள் தானே மண்வாசனை வேண்டும் என்றும், பேச்சுத் தமிழ் தான் உயிருள்ள மொழியென்றும்...'' என்று கயல்விழி ஏதொ தொடங்கினாள்.

''கொஞ்சம் பொறு கயல். இது பெரிய விஷயம். இரண்டு பக்கமும் நியாயங்கள் சொல்லலாம். எல்லாரும் ஒரு நல்ல முடிவுக்கு வரும்போது பழைய குப்பைகளைக் கிளறக்கூடாது'' என்று மூர்த்தி மாஸ்டர் கயல்விழியின் பேச்சை நிறுத்தினார்.

''நந்தி சொன்னால் சரியானதைத் தான் சொல்வார். எனக்கு அவரைத் தெரியும். கோயிலுக்கும் வருகிறவர். தனது மனதுக்குச் சரியென்று பட்டதைத் துணிந்து சொல்வார். புதிதாகவும் புதுமையாகவும் சொல்வார்!'' என்றார் கணபதி ஐயர்.

''இந்த மொழி விஷயத்தை நாங்கள் ஆனாவிலிருந்து பார்ப்போம். மொழி என்பது என்ன? ஒருவர் தன்னுடைய கருத்தை மற்றவருக்கு வெளிப்படுத்த ஏற்பட்ட ஒரு சாதனந் தான் மொழி என்பது'' - மூர்த்தி மாஸ்டர்.

''அதிலென்ன சந்தேகம்? நாங்கள் தமிழ் மொழியில் எழுதுகிறோம். அந்த எழுத்து பெரும்பாலான தமிழ் மக்களுக்கே சரியாகப் புரியவில்லை என்றால் மொழி தோன்றிய நோக்கமே பிழைத்து விடுகின்றதே!'' - கணபதி ஐயர்.

''எல்லோருக்கும் விளங்க வேண்டுமென்பதற்காகவும் ஒரு ஸ்ரைலுக்காகவும், தமிழோடு பிறமொழிச் சொற்களை அளவுகணக்கின்றிக் கலந்து எழுதுகிறார்களே சிலர். இதனால் தமிழ் மொழி என்ற பெயரில் வேறு ஏதோ ஒரு மொழி வந்துவிடுமல்லவா'' என்றான் இளங்கோ. அவன் கொஞ்சம் தூய தமிழ்வாதி. ஆனால் அவனாலும் அந்தத் தூய தமிழைச் சரிவர எழுத முடியவில்லை.

''வரட்டுமே! எப்படி மாறி வந்தாலும் தூய தமிழ் மொழி என்ற பெயரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே வழங்கும்! சங்ககாலத்தி லிருந்த தமிழா இன்று வழக்கி லிருக்கிறது? இல்லை, இடையிலே தமிழையும் வடமொழியையும் சரிக் குச் சரி கலந்து ஒரு 'தமிழ் மொழி' வழங்கிற்றே, - இன்றைக்கும் அதுவா வழங்குகிறது? மக்களின் உபயோகத் தில் உள்ள மொழி மாறிக்கொண்டே இருக்கும் என்றார் மூர்த்தி மாஸ்டர்.

"நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் பிறமொழிச் சொற்களை நிறையக் கலந்து தமிழை எழுதலாமென்றா சொல்கிறீர்கள்? இன்றைக்குத் தமிழ் நாட்டிலே முன்பு வடமொழி இருந்த இடத்தை ஆங்கிலம் பிடித்துக் கொண் டிருக்கிறது. சில எழுத்தாளர்கள் எழுத்து வசனங்களை ஆங்கிலம் தெரியாதவர் கள் விளங்கிக் கொள்வதே கஷ்டம்'' என்றார் கணபதி ஐயர்.

''வசனங்கள் மட்டுமா? பெயர்க ளைக் கூடவெல்லோ ஆங்கிலச் சொற் களைத் தமிழ் எழுத்துக்களால் எழுதுகி றார்கள்! 'ஜூனியர் விகடன்' 'ஜூனி யர் போஸ்ற்' 'இந்தியா ருடே' இப் படியெல்லாம் பத்திரிகைகளுக்கே பெயர் வைக்கிறார்களே!" என்றான் இளங்கோ.

"முன்பு சமஸ்கிருத பெயர்களைத் தமிழ் எழுத்துக்களாக எழுதினார்கள். ஆனந்த போதினி, சந்திரோதயம், கலாமோகினி - இந்தப் பத்திரி கைகளின் பெயர்களெல்லாம் தமிழ் தானா? இப்போது கூட 'சுப மங்களா' என்று ஒரு இதழ் வருகிறதே!" என்றாள் கயல்விழி.

மூர்த்தி மாஸ்டர் சற்றே நிமிர்ந்து உட்கார்ந்து சொன்னார்: "என்னுடைய கருத்து என்னவென்றால் வழக்கத்தி லுள்ள ஒரு நல்ல தமிழ்ச் சொல் இருக்கும் போது அதற்குப் பதிலாகப் பிறமொழிச் சொல்லை உபயோகிக்கக் கூடாது. தூய தமிழில் எழுத வேண்டு மென்று நினைத்து வாசகனுக்கு விளங்காமல் எழுதுகிற பேரறிஞர்கள் சிலரை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அப்படி எழுதுகிறவர்கள் தங்கள் கருத் துக்களை வாசகர் மனத்தில் சரியாகப் பதிக்க மாட்டார்கள் அவர்களால் தமிழும் வளராது..."

''அப்படியானால் தமிழ் மொழி தேய்ந்து தேய்ந்து உருமாறிப் போக வேண்டியதுதானா?'' - இளங்கோ குறுக்கிட்டான்.

''இளங்கோ பயப்பட வேண்டாம். தமிழ் உருமாறலாம். ஆனால் அதுவும் ஒரு வளர்சசிதான்!... ஆனால் இயன்ற வரை நாங்கள் தமிழைப் பேணிக்காக்க லாம். நான் முன்பு சொன்னது போல நல்ல தமிழ்ச் சொல்லிருக்க அதை விட்டுப் பிறமொழிச் சொல்லை எழுதாமல் இருக்கலாம். முக்கியமாக, மனிதர்களுக்கோ, தாபனங்களுக்கோ பெயர்கள் வைக்கும்போது அவற்றைத் தூய தமிழ்ச் சொற்களால் அமைக்க வேணும். அவ்வப்போது அருமையா கச் சில புதிய தூய தமிழ்ச் சொற்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களுக்கு அறிமுகம் செய்யலாம். அவை நன்கு பழக்கப்பட்ட பிறகே அவற்றைத் தாராளமாக உபயோகிக்க வேண்டும். உதாரணமாக முன்பு அக்கிராசனர், காரியதரிசி, பொக்கிஷாதிபர் என்று எழுதினோம் அவற்றை இப்போது தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற தூய தமிழில் எழுதுகிறோம். இதனால் வாசகர்களுக்கு எவ்விதக் கஷ்டமும் இல்லை. இதே மாதிரிப் பல சொற்கள் சமீப காலத்தில் மாறிவிட்டன. விவாகம் - திருமணம், வருஷம் - ஆண்டு, வைத்தியம் - மருத்துவம் இப்படிப் பல சொற்கள் தூய தமிழுக்கு மெலல மெல்ல மாறிவிட்டன. கஷ்டம் எப்போது வருகிறதென்றால் சிலர் தாங்கள் புதிது புதிதாகக் கண்டுபிடித்த சொற்கள் எல்லாவற்றையும் ஒரே கட்டுரையிலே புகுத்திவிட ஆசைப்படுகிறார்கள். அவற்றைப் படிக்கும் வாசகர்கள் முழிக்கிறார்கள்!"

மூர்த்தி மாஸ்டர் சொன்னதைக் கேட்டு இளங்கோ சிந்தனையில் ஆழ்ந்தான்.

கணபதி ஐயர், "மாஸ்டர் சொல்கிறது தான் சரி. தூய புதிய சொற்களை மெதுமெதுவாக வழக்கத்துக்குக் கொண்டு வந்தால் வாசகர்களுக்கு எந்தச் சிரமமும் இருக்காது. சங்க காலத் தமிழை இன்றைக்கே நடைமுறைப் படுத்தினால் அது ஒரு புதிய மொழியாகவே தோன்றும். சாதாரண வாசகர்களுக்காக எழுதப்படும் கட்டுரையோ, கதையோ அவர்களுக்கு விளங்கத்தக்க சொற்களால் அமைய வேண்டுமென்பதை யார்தான் மறுப்பார்கள்?" என்றார்.

"தேவையான போது பிறமொழிச் சொற்களைத் தமிழோடு சேர்த்துக் கொள்வது தான் நல்லது போலத் தோன்றுகிறது. இன்று உலகம் முழுவதும் பரவி, சிறப்பாக வளர்ந்திருக்கும் ஆங்கில மொழியில் மிகப் பெருந்தொகையாகப் பிறமொழி சொற் கள் கலந்திருப்பதாகத் தான் சொல்கிறார்கள். 'தூய ஆங்கிலம்' தேவையென்று அதிலுள்ள பிறமொழிச் சொற்களையெல்லாம் நீக்கிவிட்டால் அந்த ஆங்கில மொழிகூடத் தனது சிறப்பை இழந்து தேய்ந்துவிடக் கூடும்!" என்றாள் கயல்விழி.

பிள்ளையார் கோயில் அசையா மணியின் சத்தம் 'டாண் டாண்' என்று கேட்டது.

"எனக்கு நேரமாகின்றது நான் வரப்போகிறேன்" என்று கணபதி ஐயர் எழுந்தார்.

"நாங்களும் இனி வீட்டை போக வேணும்" என்று இளங்கோவும் கயல் விழியும் எழுந்தார்கள்.

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடம்போடு உயிரிடை நட்பு

'ஐயோ ஐயோ!....'

'ஐயோ, ஐயோ!....'

பலவிதமான அழுகை - அலறல் குரல்கள் வீட்டின் 'ஹோல்' பகுதியிலிருந்து அண்டை அயல் எல்லாம் பரவிக் கொண்டிருக்கிறது.

'என்னைத் தேடிய ராசாவே' என்ற செல்லம்மா மாமியின் அலறல் தனியாக எழுந்து அடிக்கிறது.

'அப்பு, அப்பு!...'

'மாமா, மாமா!...'

பலவிதமான அவலக் குரல்கள்!

கணபதிப்பிள்ளை நடுஹோலில் நீட்டி நிமிர்ந்து கிடக்கிறார். கிடத்தப்பட்டிருக்கிறார்.

இன்று மாலை நான்கு மணிபோல அவருடைய உயிர் அந்த உடலிலிருந்து பிரிந்துபோய் விட்டது.

உயிர் போனலும் அங்கே கிடப்பது கணபதிப்பிள்ளைதான்.

மனிதர்களுடைய பெயர்கள் அவர்களின் உயிரைக் குறிக்கின்றனவா, உடலைக் குறிக்கின்றனவா?

செத்துக்கிடக்கும் கணபதிப்பிள்ளைக்கு இப்போது உயிர் இல்லை. ஆனாலும் அந்த உடலுக்குப் பெயர் கணபதிப்பிள்ளைதான்.

ஓமோம். உயிருக்குப் பெயர் கிடையாது. உயிர் காற்றோடு காற்றாக அண்டப் பெருவெளியில் கலந்து விட்டால் அதற்குப் பெயர் இல்லை!

அந்த உயிர் வேற பிறவி எடுக்குமென்றாலோ, அதற்கு அப்போ வேறு பெயர்தான் கிடைக்கும். அது அந்தப் புதிய உடலின் பெயராக இருக்கும். உயிருக்குப் பெயர் இல்லை.

இப்போது செத்துப்போனது கணபதிப்பிள்ளை என்ற உடல்தானே? உயிர் சாகவில்லையே?

இங்கே அழுது கொண்டிருக்கிறவர்கள் அவருடைய உயிருக்காக அழுகிறார்களா? அல்லது இந்த உடலுக்காக அழுகிறார்களா?

கணபதிப்பிள்ளையின் உடலைச் சுற்றி அவருடைய உற்றார் உறவினர் எல்லோரும் 'குய்யோ முறையோ' என்று கதறிக் கொண்டிருக்கிறார்கள்.

மூர்த்தி மாஸ்டருக்கு அழுகை வரவில்லை.

அவர் ஒரு மாதிரி ஆள். நிறையப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கிற சாதி; நிறையச் சிந்திக்கிற சாதி.

நிறையச் சிந்திக்கிறபடியால் தானோ என்னவோ, செத்துக் கிடப்பது அவருடைய சித்தப்பாவாக - துடக்குக்காரராக இருந்த போதிலும் மூர்த்தி மாஸ்டருக்கு அழுகை வரவில்லை - அவர் மரணத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்.

மரணத்தைப் பற்றி - இந்த உடலின் நிலையாமை பற்றி - பெரிய பெரிய ஞானிகள் சித்தர்கள் எல்லாம் எடுத்துக் கூறி என்ன பயன்?

ஒருநாள் மரணித்து விட்டால் அவனைச் சுற்றியுள்ள கூட்டம் 'ஐயோ, ஐயோ' என்று அலறுகிறது.

பெரிய இழப்பு நேர்ந்துவிட்டதாகத் துடிக்கிறது.

'நடக்கக் கூடாதது' நடந்து விட்டதாக அரற்றுகிறது.

மரணம் என்பது நடக்கக் கூடாத ஒன்றா? நிச்சயமாக, சர்வ நிச்சயமாக நடக்கக் கூடியது. நடக்க வேண்டியது.

இந்த மரணத்துக்காகவா இப்படிக் கத்துகிறார்கள்?

மரணத்தின் பின்?... மூர்த்தி மாஸ்டர் சிந்திக்கிறார். கணபதிப் பிள்ளைச் சித்தப்பாவின் உயிர் இப்போது எங்கே இருக்கும்?

அப்படி 'உயிர்' என்று ஒன்று தனியாக இருக்குமா? அப்படி இருந்ததாக, இந்தக் கணபதிப் பிள்ளைச் சித்தப்பாவின் உயிர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கும்?

அண்டப் பெருவெளியில் - காற்று மண்டலத்தையும் கடந்து எங்கேயோ சென்று கொண்டிருக்குமா? அல்லது அடுத்த பிறவிக்காக இன்னொரு தாயின் வயிற்றிலிருக்கும் - உடலில் குடிபுகுந்திருக்குமா? அல்லது இவ்வளவு காலமும் தான் குடியிருந்த இந்த உடலையும் இந்த வீட்டையும் சுற்றிச் சுற்றி இங்கே நடப்பவைகளைப் பார்த்துக் கொண்டிருக்குமா?

'ச்சே!.. என்ன பைத்தியக்காரத்தனமான யோசனைகள்' மூர்த்தி மாஸ்டர் இதுவரை உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்து வீட்டின் பின்பக்கம் போகிறார்.

இரவு எட்டு மணியாகி விட்டது. வீடு முழுவதும் உயிர் - வெளிச்சம் வந்துவிட்டது. மின் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. மூர்த்தி மாஸ்டர் வீட்டின் பின்பக்கம் போகிறார்.

பின் விறாந்தையில் யாரோ அடக்கமான குரலில் யாரையோ ஏசுகிற சத்தம் கேட்கிறது.

'எளிய நாயே, இப்படி உனக்கு ஒரு வயிறா? மத்தியானம் வயிறு நிறையத் தின்றாய்தானே? மாமா செத்துக்கிடக்கிறார். நீ இங்கேயிருந்து தின்று கொண்டிருக்கிறாய். என்ன? உனக்குத் துக்கம் துயரம் இல்லாவிட்டாலும் மானம் வெட்கம் கூட இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகலிங்கம் தன்னுடைய தம்பி சின்னமணியை ஏசிக்கொண்டிருக் கிறான்.

சின்னமணிக்குப் பதினாறு வயதிருக்கும்.

மூர்த்தி மாஸ்டர் கிட்டப் போனார். அந்நேரம் சின்னமணி சாப்பிட்டுக் கொண்டிருந்த பாண் துண்டைப் பறிக்க முனைந்து கொண்டிருந்தான் நாக லிங்கம்.

'தம்பி நாகலிங்கம்! அதைப் பறிக் காதே. அவன் சின்னப் பிள்ளை...' மூர்த்தி மாஸ்டர் தடுப்பதற்குள் சின்ன மணியின் கையிலிருந்த பாணைப் பறித்துத் தூர வீசி எறிந்துவிட்டான் நாகலிங்கம்.

உடம்பால் மட்டுமன்றி உள்ளத்தா லும் ஒரு கணம் நின்று விட்ட மூர்த்தி மாஸ்டர், சின்ன மணியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

அந்தச் செத்தவீட்டிலே அழுது கொண்டிருந்தவர்களின் முகங்களில் தெரிந்த ஏக்கங்களையும் விடப் பல மடங்கு ஏக்கம் அந்தப் பிஞ்சு முகத்தில் தெரிந்தது.

மூர்த்தி மாஸ்டரின் நெஞ்சுக் குள்ளே என்னவோ செய்தது. நாக லிங்கம் ஏதோ சமாதானம் சொல்லிக் கொண்டிருந்ததையும் கவனியாமல் அவர் திரும்பி நடக்கிறார்.

சிந்தனைச் சவாரி மாடுகள் ஓடத் தொடங்குகின்றன.

பாணைத் தின்று கொண்டிருந்தது சின்னமணியின் உயிரா, உடலா? உயிருக்கு உண்ண முடியுமா?

அங்கே கிடக்கிற கணபதிப்பிள்ளைச் சித்தப்பாவினால் ஏதாவது உண்ண முடியுமா?

நான் சிந்திக்கிறேன். நான் செத்து விட்டால் என்னுடைய உடலினால் சிந்திக்க முடியுமா? அல்லது பிரிந்து போன என்னுடைய உயிர் சிந்திக்குமா? மனம் தானே சிந்திக்கிறது? உயிருக்கு மனம் உண்டா? ஒருவேளை இருக் குமோ?

அடுத்த நாள் மத்தியானம் இரண்டு மணி, கணபதிப்பிள்ளை சித்தப்பாவின் உடல் சுடலையில் சாம்பராகிக் கொண்டி ருக்கிறது.

இங்கே அவருடைய வீட்டில் சாப் பாடு நடக்கிறது. அதை 'விருந்து' என்று சொல்லக்கூடாது, குற்றம்.

திருமணம் முடித்த பிறகு உணவு கொடுத்தால் அது விருந்து, மரணம் நேர்ந்த பின் உணவு கொடுத்தால் அது வெறும் சாப்பாடுதான்.

எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டிருக் கிறார்கள். நாகலிங்கமும் அவன் தம்பி சின்னமணியும் அங்கே இல்லை. அவர்கள் கணபதிப்பிள்ளைச் சித்தப்பா வுக்குப் பெண் வழி உறவு. அவர்களுக் குத் துடக்கு இல்லை சொந்தத் தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன் வீடு என்றாலும் அவர்கள் அங்கே 'துடக்குச் சோறு' சாப்பிட மாட்டார்கள்.

மூர்த்தி மாஸ்டரின் இலையில் யாரோ சோறு போட்டார்கள்.

உணவைப் பார்த்ததும் மூர்த்தி மாஸ்டருக்கு சின்னமணியிடமிருந்து பறித்தெறியப்பட்ட அந்தப் பாண் துண் டின் நினைவு வந்தது.

அவருடைய நெஞ்சுக்குள்ளே ஒரு புழுத் துடித்தது.

அந்த நிலையிலும் மூர்த்தி மாஸ் டரின் சிந்தனை உயிரிடம் செல்கிறது.

நான் என்பது என் உடம்பில் நிறைந்து கிடக்கும் உயிரல்ல. என்னு டைய இந்த உடம்பும் 'நான்' அல்ல.

உயிரும் உடம்பும் ஒன்று சேர்ந்து இயங்கினால் மட்டுமே அங்கே 'நான்' இருக்கிறேன்.

இந்த உயிருக்கும் உடம்புக்கும் உள்ள உறவு பிரிக்க முடியாதது.

பிரிக்க முடியாததா?

'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே உடம்போடு உயிரிடை நட்பு'

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்மையும் வாய்மையிடத்து

'ஏரம்பன்' என்றால் அந்த ஊரே ஒதுங்கி நடக்கும். சிலருக்குப் பயம். சில ருக்கு வெறுப்பு - அருவருப்பு.

தன்னிலும் வலியாரான முதலாளி சின்னத்தம்பியர், உடையார் வீட்டு வேலாயுதர், பிறக்டர் சந்திரசேகரம் இப்படிச் சிலரையும், பொலிஸ்காரரை யும் கண்டால் ஏரம்பன் நாயாகி அவர் களின் கால்களை நக்கத் தயாராயிருப் பான்.

தன்னில் மெலியார் மீது வேட்கை நாய்போலப் பாய்ந்து பிடுங்குவான்.

ஈன இரக்கம், பாவ புண்ணியம் என்பதெல்லாம் அவன் அறியாத உணர்வுகள்.

ஒருமுறை அவனுடைய காணிக் குள் போய் மேய்ந்த குற்றத்துக்காக, பொன்னம்மா என்ற வயதான மனுஷி யின் பசுமாட்டை அவன் தண்டித்த விதம் - பாவம் அந்தப் பசுவின் பின்னாங் காலொன்றை ஒரே வெட்டாக வெட்டித் துண்டாடினவன் அவன்!

பொன்னம்மா அழுத அழுகை... 'ஐயோ அந்த வாயில்லாப் பிராணியின் காலை இப்படி வெட்டினானே. என்னு டைய தலையை வெட்டியிருக்கலாமே!. பிள்ளையாரே, இதை நீர்தான் கேட்க வேணும்!' என்று பொன்னம்மா ஆச்சி தனக்குள்ளேயே அழுது கொண்டிருந் தாள். வாய்விட்டுச் சொல்லப் பயம்!

ஏரம்பன் குடிக்காத நேரமில்லை. குடிவெறி இல்லாத நேரத்திலும் யாரா வது ஆட்களைக் கண்டுவிட்டால், குடித் தவன் போல அறம்புறமாகத் தூஷணம் பேசுவான்; பெண்களைக் கண்டுவிட் டால் பேச்சுவார்த்தை ஒருபடி மேலா கவே இருக்கும்.

இப்படித்தான், போன வருஷம் ஒரு போயா தினத்தன்று ஏரம்பனுக்குத் தலைகொள்ளாத வெறி. கண்டபடி தூஷ ணங்கள் பேசிக் கொண்டு ஒழுங்கையில் வந்திருக்கிறான்.

எதிரே வந்தவள் சிவகாமி இளம் பெண். மூன்று மாதங்களுக்கு முன்பு தான் திருமணமானவள், கண்ணிய மான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள். நேர்மையானவள், பயமில்லாதவள். 'ஏரம்பன்' என்றாலே அவளுக்குக் குமட்டிக் கொண்டு வரும்.

அன்று சிவகாமியை ஒழுங்கை யில் கண்டதும் ஏரம்பனுடைய தூஷண வார்த்தைகள் உச்சத்துக்கு உயர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஓரமாக ஒதுங்கி நடந்த சிவகாமி, அவனைத் திரும்பிப் பாரா மலே 'ச்சீ! ச்சீ! என்று காறித் துப்பி னாள்.

'என்னடி காறித் துப்புறாய்' என்று ஏரம்பன் அவளுக்குக் கிட்டப் போனான்.

'நான் துப்பினால் உனக்கென்ன' என்று சிவகாமி தன்பாட்டில் நடந்து கொண்டிருந்தாள்.

ஏரம்பன் முன்னுக்கு வந்து அவளை மறித்தான்.

'சீ...தள்ளிப்போ' - அருவருப்பு, வெறுப்பு, ஆத்திரம் சிவகாமிக்கு முகத் தைப் பொத்துக் கொண்டு வந்தது.

'என்னடி கனக்கப் பேசிறாய்? நான் ஆரெண்டு தெரியுமோடி' ஏரம்பன் அட்ட காசமாக - திரௌபதியின் சேலையைப் பற்றிய துச்சாதனன் மாதிரி - சிவகாமி யின் தோள்மூட்டிலிருந்த சேலையைப் பற்றி இழுத்தான்.

சிவகாமியின் உணர்ச்சி பொங்கி வெடித்தது.

'சீ, எளிய நாயே! எடடா கையை...' - சிவகாமி சீற,

ஏரம்பன் அவளுடைய சேலையு டன் ரவிக்கையையும் பொத்தி இழுக்க,

'ஐயோ! ஐயோ!' என்று சிவகாமி குழற,

அவளுடைய ரவிக்கை கிழிய -

சிவகாமியின் தமயன், ஆசிரியர் சுந்தரமூர்த்தி, தற்செயலாக அந்தப் பக்கம் வந்தவர்,

நடக்கக்கூடாதது நடப்பதைக் கண்டு, பதறி, பரபரத்து,

என்ன செய்கிறேன், ஏது செய்கி றேன், யாருடன் மோதுகிறேன் என்ற நினைவேதுமின்றி, ஆவேசம் வந்தவ ராய் ஓடிப்போய் ஏரம்பனின் தலைமயி ரைப் பிடித்து இழுக்க,

அந்த நேரம் நிலத்தில் கிடந்த மரக் கட்டை ஒன்று ஏரம்பனின் காலை இடற, ஏரம்பன் மல்லாந்து கீழே விழ.

சுந்தரமூர்த்தி மாஸ்டரின் உடம்பி லுள்ள இரத்தமெல்லாம் கொதியாய் கொதித்துக் குமுறிய நிலையில், யாரோ கொண்டு வந்து வைத்ததுபோல் வேலி யருகே கிடந்த ஒரு பெரிய கல்லைத் தூக்கி, 'இராமன் வில்லை எடுத்து கண் டார், அது உடைந்து விழுந்தது கண் டார்' என்பது போல,

சுந்தரமூர்த்தி கல்லைத் தூக்கிய தும், அந்தப் பென்னாம் பெரிய கல் ஏரம் பனின் தலையில் விழுந்ததும் ஒரு கணப் பொழுதில் நடந்து முடிந்த விஷயம்.

இதன் பிறகு -

வழக்கமான சங்கதிகள் எல்லாம் ஆறுதலாக நடந்த. பொலீஸ், மரண விசாரணை...

சம்பவம் நடந்ததைக் கண்ணாரக் கண்டவர்கள் பலர். ஆனால் கண்டவர் விண்டிலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை நடந்திருக்கிறதென்பதில் பொலிசாருக்குச் சந்தேகமில்லை.

ஏன் நடந்தது. எப்படி நடந்தது? கொலையாளி யார்?

சாட்சி சொல்ல எவருமேயில்லை.

ஏரம்பனின் தமக்கை விசாலாட்சி கூட வாயைத் திறக்கவில்லை. கூடப் பிறந்த சகோதரி என்றுகூடப் பாராமல் விசாலாட்சியின் குடும்பத்துக்கு ஏரம்பன் செய்த கொடுமைகள் - அது சகோதர பாசத்தைக் கூட அமுக்கிவிட்டது.

இந்த நிலையில் -

அந்த ஊரிலே ஒரே ஒரு மனிதர் மட்டும் 'சாட்சி சொல்லப் போக வேண்டுமே!' என்று பெருந் துன்பம் கொள்கிறார்.

ஏரம்பனுக்குக் கிடைத்த தண்டனை பிள்ளையார்தான் கொடுத்தார் என்று அவர் நம்புகிறார்.

ஆனாலும் -

கார்த்திகேயர் பரம்பரைச் சைவம். கொலை, களவு, பொய், காமம், குரு நிந்தை என்ற பஞ்சமா பாதகங்களில் மிகவும் கொடிய பாதகம் 'பொய் சொல்லுதலே' என்று உணர்ந்தவர். பிறருக்கு உபகாரியாக வாழ்பவர். ஆனால் பிறருக்கு உதவுவதும் பாவ வழிகளில் உதவக் கூடாது என்று கருதுபவர்.

கார்த்திகேயருக்கு இப்போது ஒரு தர்மசங்கடமான நிலை.

விழுந்துகிடந்த ஏரம்பனின் தலை மீது அந்தப் பாறாங்கல்லைச் சுந்தரமூர்த்தி மாஸ்டர் தூக்கிப் போட்டதைக் கார்த்திகேயர் தமது இரண்டு கண்களாலும் கண்டவர்.

'ஏரம்பன் செய்த கொடுமைகளுக்கு இப்படி நூறு கற்களைத் தூக்கி அவன் தலையில் போட்டாலும் போதாது' என்று கார்த்திகேயர் ஒப்புக் கொள்கிறார்.

தனியாகப்போன பெண்ணை - காட்டுப்புலி சிறிய ஆட்டுக்குட்டியை நசுக்கியது போல - அவன் மானபங்கம் செய்த ஒன்றுக்கு மட்டுமே அவனை நூறு துண்டாக வெட்டிப் போடலாமென்பதே கார்த்திகேயரின் நியாயம்.

ஆனாலும் -

'பொய்' சொல்லலாமா?

பொய்யும் வேண்டாம், மெய்யும் வேண்டாம். பேசாமல் வாயை மூடிக் கொண்டு இருந்து விடலாமென்றாலும் அவருடைய பண்புள்ள மனச்சாட்சி இடிக்கிறதே!

விசாரணை என்ற ஒன்று வந்திருக்கும்போது, தனக்குத் தெரிந்த உண்மையைச் சொல்லாமல் மறைப்பதும், மௌனம் சாதிப்பதும் கூட ஒருவகையில் 'பொய்' தானே... பஞ்சமா பாதகங்களில் நடுவிலிருக்கும் பெரிய பாதகம்!

தர்ம சங்கடமென்றால் கார்த்திகேயருக்குச் சரியானதர்ம சங்கடம்!

விறாந்தையிலிருந்த ஈசிச் சேரில் சாய்திருந்த கார்த்திகேயர் அறுபட்டுக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குள்ளே கார்த்திகேயரின் மகன் திருச்சிற்றம்பலம் வாய்விட்டுத் திருக்குறள் படித்துக் கொண்டிருந்தான்!

'வாய்மை எனப்படுவது
யாதெனில்
யாதொன்றும்
தீமை இலாத
சொலல்'

கார்த்திகேயர் நிமிர்ந்திருந்து அந்தக் குறளின் குரலைக் கேட்டார்.

தம்முடைய மனதுக்குள்ளேயே இரண்டு மூன்றுதரம் அந்தக் குறளைச் சொல்லிப் பார்த்தார்.

அவருக்குத் திருக்குறளில் அநேக பாடல்கள் மனப்பாடம். 'வாய்மை'க்கு அடுத்த குறளும் அவர் நினைவுக்கு வந்தது.

'பொய்மையும்
வாய்மையிடத்து
புரை தீர்ந்த
நன்மை
பயக்குமெனின்'

கலங்கிப் பதறிக் கொண்டிருந்த கார்த்திகேயரின் உள்ளம் தெளிந்து அமைதியுற்றது.

'ஏரம்பன் கொலை' வழக்கில் கொலையாளி கண்டுபிடிக்கப்படவேயில்லை!

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்றலும் புயலும்

ஞாயிற்றுக்கிழமை. பின்னேரம் ஐந்து மணி.

சற்று முன்புதான் சிறு தூக்கத்திலிருந்து விழித்திருந்தேன். நான் முகம் கழுவிக் கொண்டு வருவதற்கிடையில், என்னுடைய படுக்கைக்குப் பக்கத்திலுள்ளசிறிய மேசையின் மேல் ஒரு தட்டில் இரண்டு வடையும் தேனீரும் கொண்டு வந்து வைத்திருக்கிறாள் செல்லம்மா - என் மனைவி - இது கொஞ்சக்காலமாக ஒரு தினசரி வழக்கம்.

இப்போதெல்லாம் - அதாவது நான் பென்சனியரான பிறகு பின்னேரங்களில் ஒரு சிறு நித்திரை கொள்ளும் சோம்பேறித்தனம் என்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. என்னைக் 'காக்கா' பிடிப்பதற்கோ என்னவோ சிலர் இது உடம்புக்கு நல்லது என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள்.

அந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நான் தேனீர் குடித்துக்கொண்டிருக்கும் போது வெளியே றோட்டில் 'கொன கொன' என்று ஸ்கூட்டர் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. இரண்டொரு நிமிஷங்களில் வீட்டுக்குள்ளே காலடிச் சத்தங்கள் கேட்டன. அடுத்த நிமிஷம் 'சித்தப்பா!' என்ற உற்சாகமான இனிய குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து அக்குரலின் சொந்தக்காரி 'சாவி' என்ற சாவித்திரி என் அறைக்குள் நுழைந்தாள்.

என்னுடைய ஒரே உடன்பிறப்பு இராமநாதன். அவருடைய ஒரே மகள் சாவித்திரி. என்னுடைய கெட்டகாலம், அந்தக் காலத்தில் நான் கெட்டித்தனமாகப் படித்து கிளறிக்கல் சோதனையில் தேறி, அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்துவிட்டேன். அண்ணருடைய நல்ல காலம், கணக்குப் பாடம் அவருடைய காலை வாரிவிட்டது. எங்கள் மாமாவின் கடையில் கணக்குப்பிள்ளை மாதிரிப் போய்ச் சேர்ந்தார். நாலைந்து வருடங்களிலேயே சொந்தமாக வியாபாரம் தொடங்கினார். அடேயப்பா! இன்றைக்கு இராமனாதன் அன்கோ கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கொடிகட்டிப் பறக்கிறது! ஏழு லொறிகள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் பறந்து திரிகின்றன. என்னிலும் பார்க்க அதிகம் படித்த பத்துப் பதினைந்து உத்தியோகத்தர்கள் அவருக்குக் கீழே 'சேர், சேர்' என்று வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள். அவருக்கு ஒரு 404. வீட்டுத் தேவைக்கு ஒரு வோக்ஸ்வாகன். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சாதிபதி இல்லை; கோடீஸ்வரன்!

அவருடைய அத்தனை செல்வத் துக்கும் ஏகப் பிரதிநிதிதான் இந்தச் சாவித்திரி. பாவம் இவளுக்குச் சிறுவயதி லிருந்தே அப்பாவின் 'செல்லம்' கிடைக் கவில்லை. அவளோடு ஆறுதலாகக் கொஞ்சி விளையாட அவருக்கு எங்கே நேரம்? அதனால்தானோ என்னவோ 'சித்தப்பா' என்றாள் அவளுக்கு ஒரு தனி 'இது' எனக்கும் அவள் சொந்தப் பிள்ளைமாதிரி. தங்கைமாதிரி; ஒரு சினேகிதிமாதிரி. செல்லம்மாவுக்கும் சாவித்திரி என்றால் இனிக்கும். சாவித்திரி பழகுவது அப்படி. 'சின்னம்மா ஆஆ...' என்று ஒரு ராகம் இழுத்தாளானால் செல்லத்துக்கு உச்சி குளிர்ந்துவிடும். எங்களுக்கும் பெண்குழந்தை இல்லை. பிறந்த இரண்டும் ஆண்பிள்ளைகள். இருவரும் உத்தியோகமாகி கொழும் பில் குடியேறி விட்டார்கள். சாவித்திரி எங்கள் செல்லப்பிள்ளையாகி விட்ட தற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்க லாம்.

சித்தப்பா!...ஓ! எழும்பி விட்டீர்களா? ஒருவேளை இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறீர்களோ என்று நினைத் தேன். சித்தப்பா! உங்களைப் பார்க்க ஒரு ஆள் வந்திருக்கிறார்!'

'ஆரது?' என்று நான் கேட்கையி லேயே ஸ்ராண்டிலிருந்த என்னுடைய 'சேட்டுடை எடுத்து வந்து எனது ஒரு கையைப் பிடித்து மாட்டத் தொடங்கி னாள் சாவி.

'ஒரு இளம் எழுத்தாளர். என்னோடு படிக்கிறவர். உங்களைப் பார்க்க வேண்டு மென்று வந்திருக்கிறார்.!'

சாவித்திரி பல்கலைக்கழகத்தில் பீ.ஏ. படிக்கிறாள். கடைசி ஆண்டு. அவளுக் குத் தமிழ் இலக்கியங்களில் அவ்வளவு பெரிய ஈடுபாடு என்று சொல்ல முடியாது. சும்மா அது ஒரு பொழுதுபோக்கு. நாகரிகம் என்ற அளவுக்கு கொஞ்சம் தெரிந்து வைத்திருக்கிறாள்.

நான் சேட் பொத்தான்களைப் பூட்டிக்கொண்டே எழுந்தேன் 'என்ன விசேஷம் சாவி'

'விஷேசம் ஒன்றுமில்லைச் சித் தப்பா! உங்களைச் சும்மா பார்த்து விட்டுப் போகத்தான் வந்திருக்கிறார். - வாருங்கோ! என்று என் கையைப் பிடித்து அறைக்கு வெளியே ஹோலுக்கு அழைத்து வந்தாள் சாவி.

ஹோலிலே சோபாவில் உட்கார்ந் திருந்த இளைஞன் என்னைக் கண்ட தும் எழுந்து கைகூப்பி வணங்கினான். நானும் கைகளைக் குவித்துக் கொண்டு அவன் பக்கத்திலிருந்த சோபாவில் போய் அமர்ந்தேன்.

'சித்தப்பா, இவர் என்னுடைய நண்பர் நரேந்திரன். தமிழ் இலக்கி யத்தில் மிகுந்த ஆர்வமுள்ளவர். இளம் எழுத்தாளரும்கூட... நரேன், இவர் தான் என் சித்தப்பா பழம் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்...'

சாவியின் அறிமுகத்துக்காக காத்திருந்தவன்போல, நரேந்திரன் என்னைப் பார்த்து உங்களைப் பற்றிய நிறையக் கேள்விப்பட்டிருக் கிறேன். உங்களைப் பார்க்க வேண்டு மென்று எனக்கு மிகுந்த ஆவல். சமீபத் தில்தான் எனக்குத் தெரியவந்தது. நீங்கள் சாவி - சாவித்திரியின் சித்தப்பா என்று!'

'என்னைப் பார்க்க வந்ததில சந்தோ ஷம். ஆனால் இப்போதெல்லாம் என்னை 'எழுத்தாளன்' என்று சொல்ல முடியாது. எழுதி நெடுங்காலமாகி விட்டது. அந்தத் துறையில் எப்படியோ ஈடுபாடு குறைந்துவிட்டது' என்றேன் நான்.

'நானும் அதைத்தான் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். நீங்கள் ஏன் இப்போது எழுதுகிற தில்லை? - சரியாகச் சொன்னால் நீங் கள் எழுதாமலிருப்பது தமிழ் இலக்கியத் துக்குச் செய்யும் துரோகமாக இருக்கும்.'

நான் சிரித்தேன். சிலபேர் எழுது வதனால் தமிழுக்குத் துரோகம் செய் கிறார்கள். நான் எழுதாமலே துரோகம் செய்கிறேனா!

நான் ஏதும் சொல்லுமுன்பே சாவி குறுக்கிட்டு, 'நீங்கள் இரண்டுபேரும் பேசிக்கொண்டிருங்கள் நான் சின்னம் மாவைப் பார்த்துக்கொண்டு வருகி றேன்' என்று சொல்லிவிட்டு எழுந்து உள்ளே போனாள்.

'உங்களையும் ஒரு எழுத்தாளர் என்று சாவி சொன்னாளே, என்ன எழுதியிருக்கிறீர்கள்?' என்று நான் நரேந்திரனிடம் கேட்டேன்.

'நானா!... சாவி சொன்னாளா...' என்று ஒரு நிமிஷம் நரேன் தயங் கினான். பிறகு, 'எழுதவேணுமென்று மிகுந்த ஆவல் இருக்கிறது.. இனிமேல் தான் ஏதும் உருப்படியாக எழுத வேண் டும்.

'...சில கவிதைகள் எழுதிப் பார்த் திருக்கிறேன். எங்கள் தமிழ்ச் சங்க சஞ்சிகையின் இவ்வாண்டு மலரில் என்னுடைய கவிதை ஒன்று வெளி வந்திருக்கிறது...'

'ஓ!... கவிஞரா!... எனக்கும் கவி ஞர்களைப் பிடிக்கும் கவிதை எழுது கிறவர்கள் பொதுவாக நல்லவர்களாக இருக்கிறார்கள்... நான்கூட அந்தக் காலத்தில கவிதைகள் எழுதியிருக்கின் றேன்' என்றேன்.

உள்ளேயிருந்து சாவி வந்தாள்.

'கவிதையைப் பற்றித் தொடங்கி விட்டீர்களா!..' என்று நரேந்திரனை ஓரக்கண்ணால் பார்த்துச் சிரித்தாள். அவளுடைய இரண்டு கைகளிலும் இரண்டு தம்ளர்களில் கோப்பி. ஒரு தம்ளரை நரேந்திரனிடம் கொடுத்து விட்டு, மற்றதைத் தான் வைத்துக் கொண்டு நரேந்திரனுக்குப் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு சகஜமாக உட்கார்ந்து கொண்டாள். ஒருகணம் எனக்குத் 'திகில்' என்றாலும், மறுகணமே சமாளித்துக் கொண்டேன். காலம் எவ்வளவு வேகமாக மாறிக்கொண்டு வருகிறது! ஒரு வாலிபனும் ஒரு யுவதியும் ஒரே ஸ்கூட்டரில வருகிறார்கள். அவனுக்குப் பக்கத்தில் அவள் வெகு சாதாரணமாக உட்கார்ந்து கொள்கிறாள். இத்தனைக்கும் அவர்கள் தம்பதிகளல்லர். காதலர்கள் என்று சொல்வதற்குமில்லை. வெறும் நண்பர்கள்தாம்! அந்தக் காலத்தில் எனக்கும் செல்லத்துக்கும் திருமணம் நிச்சயமான பிறகு கூட நான் இருந்த அறைக்குள் ஏதும் ஒரு பொருளை எடுப்பதற்கு அவள் வரமறுத்து வேறு யாரையோ உதவிக்கு அழைத்த சம்பவம் என் நினைவுக்கு வந்தது. காலம் மிக வேகமாகத்தான் மாறிவருகிறது!

'சித்தப்பா, உங்களுக்குக் கோப்பி இல்லை. சின்னம்மா சொன்னா. சற்று முன்புதான் டீ குடித்தீர்களாம். அடிக்கடி கோப்பி, டீ குடித்தால் உடம்புக்கு ஆகாதாம். உங்களுக்குக் கொடுக்க வேண்டாமென்று சின்னம்மாவின் உத்தரவு' என்று சிரித்தாள் சாவி. பிறகு எழுந்து என்னருகே வந்து மெதுவான குரலில், 'பாவம் சித்தப்பா, ஒருவாய் குடித்து விட்டுத் தாருங்கள்' என்று தன்னுடைய கோப்பி தம்ளரை என் உதட்டருகே சரித்தாள். நான் சிரித்துக் கொண்டே ஒரு வாய் குடித்துவிட்டு, 'போதும் சாவி, என் உடம்புக்கு ஆகாது' என்றேன்.

'பார்த்தாயா நரேன்! நல்ல கணவனுக்கு ஒரு இலக்கியமென்றால் அது எங்கள் சித்தப்பாதான்' சித்தி 'காகம் சிவப்பு நிறம்' என்று சொன்னால் சித்தப்பா 'சிவப்புநிறமாயுள்ளதெல்லாம் காக்கைதான்! என்பார்' என்று கலகல வென்று சிரித்துக் கொட்டினாள் சாவி.

நரேனும் மெதுவாகச் சிரித்தான். பிறகு, நேரமாகிறது, 'நான் பேக வேணும்' என்று எழுந்தான்.

'ஏ, ஏ! நரேன், என்ன அவசரமா? உன்னுடைய கவிதையை இன்னும் சித்தப்பாவுக்குக் காட்டவில்லையே' என்றாள் சாவி.

'இல்லை. நான் அதைக் கொண்டு வரவில்லை. அடுத்த முறை கொண்டு வந்து காட்டுகிறேன்'

'நாலைந்து வரிதானே உனக்குப் பாடமாயிருக்கும்.. சும்மா சொல்லு, உன்னுடைய கவிதையைப் பாராட்டும்படி சித்தப்பாவிடம் சொல்கிறேன். அவர் நன்றாயிருக்கிறதென்று இரண்டு வார்த்தை சொன்னால் உனக்கு உச்சி குளிர்ந்து போகும்'

நரேந்திரனுக்குத் தர்ம சங்கடமாயிருந்ததுபோலும், அவளை விடுவிக்க எண்ணி, 'இல்லைச் சாவி, இந்நாளைய கவிதைகள் வாயைத் திறந்து சொல்ல அழகாக இருக்கமாட்டா. பார்த்துப் படித்தால்தான் அவற்றின் சுவை தெரியும்' என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்லைச் சித்தப்பா, அந்தக் கவிதை வாயைத் திறந்து சொல்வதற்கும் நன்றாகவே இருக்கும். ... என்ன நரேன்? எனக்குக்கூட அந்தக் கவிதை பாடமாயிருக்கிறது. நான் சொல்கிறேன் சித்தப்பா...'

**'நீ ஒரு மல்லிகை**
**நேற்றுவரை மொட்டாக இருந்திருப்பாய்**
**நான் பார்க்கவில்லை**
**ஆனால் இன்றோ**
**ஓ! எவ்வளவு அழகாக மலர்ந்துவிட்டாய்!**
**அடி கண்ணே,**
**இப்போது உன்னைப் பாராமலிருப்பது எப்படி?'**

கவிதையைச் சொல்லிவிட்டுச் சாவி கலகலத்தாள். தன்னுடைய அந்தரங்கம் ஏதோ அம்பலமாகிவிட்டதைப் போல் நரேந்திரன் என்னைப் பார்க்கக் கூசினான். அவனைப் பரிகாசம் செய்கிறாளா சாவி?

நரேனுக்கு என்னவோ போலாகிவிட்டது. 'நான் வருகிறேன். எனக்கு நேரமாகிவிட்டது' என்று சொல்லிப் புறப்பட்டான். படலை வரையும் அவனோடு கூடப்போய் வழியனுப்பிவிட்டுச் சிரித்துக் கொண்டே வந்தாள் சாவி.

'சித்தப்பா இந்தக் 'கவி' எப்படி?'

'நீ கவிதையைப் பற்றி சொல்கிறாயா அல்லது கவிஞரைப் பற்றிக் கேட்கிறாயா?'

'கவிதையைப் பற்றிச் சொல்லுங்கள். கவிஞரைப் பற்றியும் சொல்லுங்களேன்'

எனக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. 'இவள் அந்த இளைஞனைக் காதலிக்கிறாளோ?'

'சரி. எங்கே அந்தக் விதையை இன்னொருமுறை சொல்லு பார்க்கலாம்... 'நீ ஒரு மல்லிகை' - பிறகு

**'நீ ஒரு மல்லிகை**
**நேற்றுவரை மொட்டாக இருந்திருப்பாய்**
**நான் பார்க்கவில்லை**
**ஆனால் இன்றோ**
**ஓ! எவ்வளவு அழகாக மலர்ந்துவிட்டாய்!**
**அடி கண்ணே,**
**இப்போது உன்னைப் பாராமலிருப்பது எப்படி?'**

'மிக நன்றாகப் பாடமாக்கி வைத்திருக்கிறாயே சாவி! உனக்கு இந்தக் கவிதை நன்றாகப் பிடித்துக் கொண்டது போலிருக்கிறதே!'

'என்னுடைய விஷயம் இருக்கட்டும் சித்தப்பா. உங்களுடைய அபிப்பிராயம் என்ன?'

அவருடைய முகத்தில் தெரிந்த பிரகாசத்தைக் கண்டதும் என்னால் அந்தக் கவிதையைப் பற்றி 'நல்ல' அபிப்பிராயமே சொல்ல முடிகிறது.

'கவிதை நன்றாயிருக்கிறது சாவி. இந்தக் கவிதையை அவர் யாரோ ஒரு பெண்ணுக்காகத்தான் பாடியிருப்பாரென்று நினைக்கிறேன். என்னைவிட வேறு ஒரு ரசிகரையும் விட அந்தப் பெண்தான் இந்தக் கவிதையை உண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையில் மிகவும் ரசித்து மகிழ்ந்திருப்பாள்'

சாவியின் முகத்தில் மெல்லிய நாணத்தின் சாயல் படர்வது போலத் தெரிந்தது. மின்வெட்டும் நேரந்தான். உடனே அவள் சிரித்துக்கொண்டே, 'சித்தப்பா!.....' என்று ஒரு இராகம் இழுத்தாள். பிறகு 'நீங்களும் துப்பறியத் தொடங்கிவிட்டீர்கள் போலிருக்கிறதே!' என்றாள்.

எனக்கு விளங்கிவிட்டது.

'என்னிடம் சொல்லு சாவி, நீ அந்த நரேந்திரனை....'

'நான் இன்னும் காதலிக்கவில்லை சித்தப்பா! ஆனால் அவனுக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கிறதென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். என்னிடம் வாய் விட்டுச் சொல்ல அவன் தயங்குகின்றான். சித்தப்பா, நரேனை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'

'ஒருமுறை பார்த்தவுடனேயே இந்த விஷயத்தில் அபிப்பிராயம் சொல்ல முடியுமா சாவி? நீயாலும் அவரைப்பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருப்பாய். உன்னால் அபிப்பிராயம் சொல்ல முடியும். என்னால் முடியுமா?'

'அவன் நல்லபிள்ளை.நான் என்ன கேட்டாலும் செய்வான் போலிருக்கிறது. கூடாத பழக்கங்கள் எதுவுமில்லை. படிப்பில் கெட்டிக்காரன். அழகாகவும் இருக்கிறான்- அப்படித்தானே சித்தப்பா? ஓ. நான் அவனைக் காதலிக்கலாமா சித்தப்பா!'

எனக்குத் திகைப்பாக இருந்தது. யாழ்ப்பாணத்துத் தமிழ் யுவதி ஒருத்தி தனது வாழ்க்கையைப் பற்றி எவ்வளவு நிதானமாக, தெளிவாகச் சிந்திக்கிறாள் காலம் எவ்வளவோ மாறித்தான் விட்டது!

மேலும் சிறிது நேரம் இருந்து ஏதேதோ வேறு விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்துவிட்டு சாவித்திரி தன் வீட்டுக்குப் போய்விட்டாள். எங்கள் வீட்டிலிருந்து நாலு வீடு தள்ளினால் அவளுடைய வீடு.

அவள் போய்விட்டாளே தவிர. அவளைப் பற்றிய சிந்தனைகள் என் உள்ளத்தில் நிறைந்து நின்றன.

சாவித்திரிக்கு ஏற்ற இடத்தில் திருமணம் செய்து வைப்பதற்கு அண்ணரை நம்பியிருக்க முடியாது. நான் தான் முயற்சி செய்யவேண்டும். திரும்பத் திரும்ப அந்த நரேந்திரனுடைய முகம் என்னுடைய மனத்திரையில் மின்ன ஆரம்பித்தது. நல்ல வேளையாக அவளிடம் அவனைப் பற்றிய சில விபரங்களைக் கேட்டு வைத்திருந்தேன். அவனுடைய ஊர் தொல்புரம் என்றாள். தகப்பனார் பெயர் சண்முக சுந்தரம் நாவலப்பிட்டியில் ஒரு தமிழ் வித்தியாலயத்தின் அதிபராக இருக்கிறார் என்றாள்.

என்னுடைய நண்பர் ஒருவர் அந்த தொல்புரம் கிராமத்தில் இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு வந்தது. அடுத்த புதன்கிழமை நான் பத்துமைல் தூரம் பஸ் பிரயாணம் செய்து அரைமைல் தூரம் ஒழுங்கையில் நடந்து என் நண்பருடைய வீட்டுக்குப் போனேன். நரேந்திரனைப் பற்றி விசாரித்தேன். அவர் சொன்ன விஷயங்கள் மிகத் திருப்தியாக இருந்தன. நரேந்திரனும் அவன் பெற்றோருக்கு ஒரே பிள்ளையாம். அவனுடைய தகப்பனார் தங்கக்கம்பியாம். நரேந்திரனோ தங்கக் கட்டியாம்! என்னுடைய நண்பருக்கு இந்த உலகத்தில் சிறந்த பொருள் தங்கந்தான்! நான் 'சம்பந்த' விஷயமாக விசாரிப்பது தெரிந்ததும் அவர் சொன்னார், என்னுடைய பெண் பெரிய அதிர்ஷ்டக்காரியாக இருந்தால் நரேந்திரன் அவளுக்குக் கணவனாக வாய்ப்பானென்று!

மகிழ்ச்சிப் பெருக்கோடு நான் வீட்டுக்குத் திரும்பினேன். அன்று தொடக்கம் என் சிந்தனையெல்லாம் சாவித்திரிக்கு நரேந்திரனைத் திருமணம் செய்து வைப்பதைப்பற்றித் தான். நரேந்திரன் சாவித்திரியிடம் உயிராய் இருக்கிறானென்பதை அவளே சொல்லிவிட்டாள். சாவித்திரி போன்ற ஒரு பெண்ணை மருமகளாகப் பெறுவதில் எந்தப் பெற்றோரும் பூரித்துப் போவார்கள். அழகு, குணம் - வழக்கம் போல அந்தப் பெற்றோரும் சீதனத்தைப் பற்றி நினைத்தாலேகூட, அடேயப்பா, சாவித்திரியின் சீதனத்தைக் கேட்டால் அப்படியே வாயைப் பிளந்து விடுவார்களே! 'எல்லாம் சரிவந்துவிட்டது' என்று மனதுக்குள் தீர்மானித்துக்கொண்டேன்.

சாவித்திரியிடம் இனி நேராக, தெளிவாகப் பேசிவிட வேண்டும்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை, மாலை ஐந்துமணி.

வழக்கமாக வருகிற சிறு நித்திரை கூட அன்று எனக்கு வரவில்லை. சாவித்திரியும் நரேந்திரனும் வரப்போகிறார்கள்!

வீதியில் ஸ்கூட்டர் சத்தம் எந்த நிமிஷமும் கேட்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஸ்கூட்டர் 'கொன கொன'க்கக் காணோம். ஆனால் படலையருகே ஏதோ பேச்சுக்குரல் கேட்டது. படலை திறக்கும் சத்தமும் தொடர்ந்து வீட்டுக்குள் காலடிச் சத்தங்களும் கேட்டன.

என்னுடைய அறையின் கதவைத் திறந்து கொண்டு 'சித்தப்பா' என்று வழக்கமான ராகத்துடன் வந்தாள் சாவி.

'வந்துவிட்டாயா! வா சாவி. ஸ்கூட்டர் சத்தம் கேட்கவேயில்லை' என்றேன்.

'இன்றைக்கு ஸ்கூட்டரில் வரவில்லைச் சித்தப்பா. சும்மா சைக்கிளிலேயே வந்துவிட்டோம்' என்றாள் சாவி.

'வந்துவிட்டோம்' என்று அவள் பன்மையில் சொன்னது எனக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

'நரேந்திரன் ஹோலில் இருக்கிறாரா?... இதோ வந்துவிட்டேன்' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எழுந்தேன்.

'வாருங்கள் சித்தப்பா. ஆனால் இன்று நரேன் வரவில்லை... ராஜா வந்திருக்கிறான்!' என்று சிரித்தாள் சாவி.

என்னுடைய பரபரப்பெல்லாம் ஓடி உறைந்துவிட, நான் அப்படியே நின்று அவளைப் பார்த்தேன்.

'என்ன பார்க்கிறீர்கள் சித்தப்பா? ராஜா ஒரு கவிஞன் இல்லைத்தான். ஆனால் நரேனைப் போல - சில விஷயங்களில் அவனைவிட இவன் சிறந்தவன். வாருங்களேன், இவனை வந்து பாருங்கள்' என்று என் கையைப் பற்றினாள் சாவி.

நான் அசையவில்லை. ஒருவார காலமாக நான் கட்டிய கோட்டையின் அத்திவாரமே ஆடுவதாக உணர்ந்தேன்.

'சாவி, நரேனுக்கும் உனக்கும்.. உங்களுக்கிடையே...'

அவள் கலகல என்று அதிரச் சிரித்தாள்.

'என்ன சித்தப்பா, சும்மா ஒரு சின்ன இதைப் பிடித்துக் கொண்டு நீங்கள் பெரிதா... நான் நரேனைக் காதலிக்கலாமா என்று ஒவ்வொரு சமயம் நினைத்ததுண்டு. ஆனால் போன திங்கட் கிழமை அந்த எண்ணத்துக்கும் தலை முழுகி விட்டேன். அன்று ஏதோ பேச்சு வாக்கில் அவனுடைய குணம் எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. அவன் ஒரு காசுப் பைத்தியம் சித்தப்பா! ... நான் பணக்காரியாக இல்லாமலிருந்தால் அவன் என்னைக் கல்யாணம் செய்ய சம்மதிக்க மாட்டான். அதற்குமேல் அவனைப்பற்றி எனக்கு ஏன் தேவையற்ற எண்ணங்கள். எனக்கு அவனோடு கோபம் இல்லை. இப்போது அவன் ஒரு சாதாரண ஒரு நண்பன் தான்... சித்தப்பா ராஜா வந்திருக்கிறான். நானும் அவனும் ஒரே சைக்கிளில் தான் வந்தோம். இவனும் கெட்டிக்காரன், அழகானவன், நல்ல அந்தஸ்தில் உள்ளவன்.. சித்தப்பா, இவனையும் வந்து பார்த்துவிட்டு நீங்கள் உடனேயே 'சம்பந்தம்' பேச நினைத்து விடாதீர்கள்... வாருங்கள். ராஜா காத்துக் கொண்டிருக்கிறானே!'

அறை வாசலை நோக்கி நான் மெல்ல நடந்தேன்.

என்னுடன் என்னுடைய சிந்தனை.

நான் பெண்களைத் தென்றலாக நினைத்து கொண்டிருக்கிறேன். இந்தக் காலத்துப் பெண்கள் புயலாகிவிட்ட காலம் போலிருக்கிறதே!

புயலுக்குக்கூட ஒரு கெம்பீரமும் அழகும் இருக்கத்தான் செய்கிறது.

OOO

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தா அச்சகம், 226, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P 222 2820

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org